# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 10/2016** **நாள்: 28.09.2016**

### வேட்பாளர்கள் / கட்சிகள் விளம்பரத்தட்டிகள் / விளம்பரப்பட்டிகைகள் மற்றும் சுவரொட்டிகளிலுள்ள விளம்பரங்களை அகற்றுதல் மற்றும் அழித்தல்

வேட்பாளர்கள் பெயரிலோ, கட்சிகள் பெயரிலோ மற்றும் இது தொடர்பான எந்தவொரு வாசகங்களோ அச்சிடப்பட்ட எவ்விதமான விளம்பரத்தட்டிகளோ (Posters), விளம்பரப்பட்டிகைகளோ (Banners/Digital Banners), சுவரொட்டிகளோ, சுவரில் எழுதப்பட்டோ மாநிலத்தின் எந்தவொரு பொது இடத்திலும் இருத்தல் கூடாது. இது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நடைமுறைப்படுத்திய விதிகளையே நடைபெறவிருக்கின்ற 2016, உள்ளாட்சி தேர்தல்களிலும் பின்பற்றிட வேண்டும். எவ்விதமான விளம்பரத்தட்டிகளோ (Posters), விளம்பரப்பட்டிகைகளோ (Banners/Digital Banners), சுவரொட்டிகளோ விளம்பரப்படங்களோ (Cutouts), மாநிலத்தின் எந்தவொரு பொது இடத்திலும் இருப்பின் அவைகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

சுவர்களில், வேட்பாளர்களின் பெயர்களோ, கட்சிகளின் பெயர்களோ அல்லது அது தொடர்பான வாசகங்களோ வண்ணப்பூச்சுகளால் எழுதப்பட்டிருந்தால், அவைகள் அனைத்தையும் இடத்திற்கு தகுந்தாற்போல் வேறுவிதமான வண்ணப்பூச்சுளால் மறைத்து உடனடியாக அழிக்கப்பட வேண்டும். இப்பணியை எவ்வித இடர்கள் இல்லாமலும் எவ்விதமான பாகுபாடின்றியும் மேற்கொண்டிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி).

28/9/16

மக்கள் தொடர்பு அலுவலர்